# உங்கள் எரிசக்திக்காகும் செலவுகளைச் சேமித்து, சுற்றுப்புறச்சூழலைப் பாதுகாக்க உதவுங்கள்

விக்டோரிய எரிசக்தி மேம்பாட்டுத் (Victorian Energy Upgrades (VEU)) திட்டத்தின் மூலம், நீங்கள் தள்ளுபடி செய்யப்பட்ட எரிசக்தி-செயல்திறனுள்ள தயாரிப்புகளைப் பெற்று உங்கள் எரிசக்தி கட்டணச் சீட்டுகளில் சேமிக்கலாம்.



Tamil | தமிழ்

## விக்டோரிய எரிசக்திச் செயல்திறன் இலக்குத் திட்டம் நுகர்வோர்க்கான மெய்த்தகவல் அறிக்கை (factsheet)

**விக்டோரிய எரிசக்தி மேம்பாடுகள் (VEU) என்பது ஒரு தன்னார்வ விக்டோரிய அரசாங்க முன்னெடுப்பாகும், இது விக்டோரியவாசிகளுக்கு அவர்களின் வீடுகள் மற்றும் வணிகங்களில் எரிசக்தி-செயல்திறனுள்ள மேம்பாடுகளைச் செய்வதற்கு ஊக்கச் சலுகைகளை வழங்குகிறது. இது மின் கட்டணங்களைக் குறைக்கவும், பசுமை இல்ல வாயு வெளியேற்றங்களையும் (greenhouse gas emissions) குறைக்கவும் உதவுகிறது.**

## தகுதி

ஒவ்வொரு விக்டோரியக் குடும்பமும், வணிகமும் இத்திட்டத்தில் பங்கேற்று, தள்ளுபடி செய்யப்பட்ட எரிசக்தி-செயல்திறன் கொண்ட தயாரிப்புகள் மற்றும் சேவைகளைப் பெறலாம். **உங்கள் பங்கேற்பு உங்கள் சொந்த விருப்பத்துக்குட்பட்டது.**

## இத்திட்டத்தில் பங்கேற்பது எளிது

**படிமுறை 1.** கிடைக்கக்கூடிய தயாரிப்புகளைத் தேடிப் பார்க்கவும்.

**படிமுறை 2.** உங்கள் எரிசக்திக்காகும் செலவுகளைக் குறைக்க, நீங்கள் நிறுவ விரும்பும் தயாரிப்புகளைத் தேர்ந்தெடுக்கவும்.

**படிமுறை 3.** அங்கீகாரம் பெற்ற வழங்குநர் ஒருவரை ஈடுபடுத்தவும். எரிசக்தி செயற்திறன்கொண்ட விக்டோரிய எரிசக்தி மேம்பாடுகளின் (VEU) தயாரிப்புகளை நிறுவ, அங்கீகாரம் பெற்ற வழங்குநர் ஒருவருடன் நீங்கள் வேலை செய்ய வேண்டும். அங்கீகாரம் பெற்ற வழங்குநர்கள், நீங்கள் நிறுவ விரும்பும் எந்தவொரு தயாரிப்புகளுக்குக் கழிவு அல்லது தள்ளுபடியை ஏற்பாடு செய்வதற்கும் பொறுப்பாவார்கள்.

- நீங்கள் என்ன தயாரிப்புகளை பயன்படுத்தலாம்
- நீங்கள் தேர்ந்தெடுக்கும் தயாரிப்புகளை யார் நிறுவ முடியும் என்பதை அவர்கள் உங்களுக்குச் சொல்வார்கள்.

## கிடைக்கக்கூடிய தயாரிப்பை அல்லது அங்கீகாரம் பெற்ற வழங்குநரைக் கண்டறிய

விக்டோரிய எரிசக்தி மேம்பாடுகள் (VEU) உதவி மையத்தை (03) 9032 1310 என்ற எண்ணில் அழைக்கவும்

மின்சாரம், எரிசக்தி மேம்படுத்தல் பற்றிய தகவல்களுக்குத் தயவுசெய்து 1-ஐ அழுத்தவும். இந்தத் தெரிவுக்கான இணைப்பை நீங்கள் கேட்ட பிறகு, 0 -ஐ அழுத்தவும்.

**காது கேளாமை, செவித்திறன் அல்லது பேச்சுத்திறன் குறைபாடு உள்ளதா?**

தேசிய அஞ்சல் சேவையை (National Relay Service) 133 677 என்ற எண்ணிலோ அல்லது www.relayservice.gov.au என்ற இணையதளத்தின் மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்

Victorian Energy Upgrades

VICTORIA State Government

## விக்டோரிய எரிசக்தி மேம்பாடுகள் (VEU) மூலம் உங்கள் எரிசக்திக்கான கட்டணச் சீட்டுளைச் சேமிக்கவும்

| | குடும்பங்கள் | வணிகங்கள் |
|---|---|---|
| **ஒரு ஆண்டுக்கான தற்போதைய சேமிப்பு** | மேம்படுத்தல்/களைப் பொறுத்து, ஒரு சராசரிக் குடும்பம் ஆண்டு ஒன்றுக்கு 120 டாலர்கள் முதல் 1,100 டாலர்கள் வரை எரிசக்திக்காகும் செலவுகளைச் சேமிக்க முடியும். | உங்கள் வணிகத்தின் அளவு மற்றும் மேம்படுத்தல்/கள் ஆகியவற்றைப் பொறுத்து, நீங்கள் ஆண்டுக்கு 500 டாலர்கள் முதல் 74,000 டாலர்கள் வரை சேமிக்கலாம். |

## விக்டோரிய எரிசக்தி மேம்பாடுகள் (VEU) திட்டத்தின் கீழ் உங்கள் உரிமைகள்

**விக்டோரிய எரிசக்தி மேம்பாடுகள் (VEU) திட்டமானது நுகர்வோரைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்ட, ஒழுக்கத்துக்கான குறைந்தபட்ச தரநிலைகளை அமைக்கும் நடத்தை நெறிமுறை (Code of Conduct) ஒன்றினைக் கொண்டுள்ளது. வழங்குதல் அல்லது சந்தைப்படுத்தலை மேம்படுத்துதலில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் இது பொருந்தும்.**

### சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள்

அங்கீகாரம் பெற்ற வழங்குநர் அல்லது அவர்களின் சார்பாக செயல்படும் மூன்றாம் தரப்பினர், விக்டோரிய எரிசக்தி மேம்பாடுகள் (VEU) திட்டத்தைப் பற்றி உங்களைத் தொடர்பு கொண்டால், அவர்கள் பின்வருவனவற்றைக் கண்டிப்பாகப் பின்பற்றவேண்டும்:

- நீங்கள் 18 வயதுக்கு மேற்பட்டவராகவும், வழங்கப்பட்ட தகவலைப் புரிந்துகொள்ள முடிந்தவராகவும் இருந்தால் மட்டுமே விக்டோரிய எரிசக்தி மேம்பாடுகள் (VEU) திட்டம் மேம்படுத்தலைச் சந்தைப்படுத்த/விற்பனைசெய்ய வேண்டும்.
- இத்திட்டம் சொந்த விருப்பத்துக்குட்பட்டது, அத்துடன் நீங்கள் கட்டாயம் பங்கேற்க வேண்டும் என்ற அவசியமில்லை என்பதை விளக்க வேண்டும்
- அவர்கள் உங்கள் முகவரியை எப்படிப் பெற்றார்கள், மேலும் அவர்கள் ஏன் உங்கள் வீட்டிற்கோ அல்லது வணிகத்தலத்திற்கோ வருகிறார்கள் என்பதை விளக்க வேண்டும்
- அவர்கள் எந்த வணிகத்துக்காகப் பணிபுரிகிறார்கள் என்பதை உங்களுக்குக் கூற வேண்டும்
- ஒரு புகைப்படம், அவர்களது முழுப் பெயர், தொடர்பு விவரங்கள், ஆஸ்திரேலிய வணிக எண் (ABN) மற்றும் முக்கிய ஒப்பந்ததாரர் விவரங்கள் அடங்கிய அடையாள அட்டையை எப்போதும் அணிந்திருக்க வேண்டும்
- பொருட்கள் அல்லது சேவைகளை விற்கவோ அல்லது சந்தைப்படுத்தவோ அதிகமாக அழுத்தம் கொடுக்கும் தந்திரங்களைப் பயன்படுத்தக் கூடாது
- வழங்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகள் மற்றும் அவற்றின் பொருத்தம் பற்றிய துல்லியமான தகவல்களை வழங்கவேண்டும்
- தவறான அல்லது ஏமாற்றும் காரியங்களைச் சொல்லக்கூடாது - இதில் அவர்கள் விக்டோரிய அரசுக்காக அல்லது அத்தியாவசிய சேவைகள் ஆணையத்துக்காக வேலை செய்கிறார்கள் என்பது அல்லது சந்தைப்படுத்தல் நோக்கங்களுக்காக விக்டோரிய அரசு தனிப்பட்டத் தொடர்புத் தகவல்களை (தொலைபேசி எண்கள் போன்றவை) வழங்குவது போன்றவை அடங்கும்.

## கிடைக்கக்கூடிய தயாரிப்பை அல்லது அங்கீகாரம் பெற்ற வழங்குநரைக் கண்டறிய

விக்டோரிய எரிசக்தி மேம்பாடுகள் (VEU) உதவி மையத்தை **(03) 9032 1310** என்ற எண்ணில் அழைக்கவும்

மின்சாரம், எரிசக்தி மேம்படுத்தல் பற்றிய தகவல்களுக்குத் தயவுசெய்து 1-ஐ அழுத்தவும். இந்தத் தெரிவுக்கான இணைப்பை நீங்கள் கேட்ட பிறகு, 0 -ஐ அழுத்தவும்.

**காது கேளாமை, செவித்திறன் அல்லது பேச்சுத்திறன் குறைபாடு உள்ளதா?**

தேசிய அஞ்சல் சேவையை (National Relay Service) 133 677 என்ற எண்ணிலோ அல்லது www.relayservice.gov.au என்ற இணையதளத்தின் மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்

Victorian Energy Upgrades

VICTORIA State Government

# விக்டோரிய எரிசக்தி மேம்பாடுகள் (VEU) திட்டத்தின் கீழ் உங்கள் உரிமைகள் - *தொடர்கிறது*

## ஒப்பந்தங்கள்

நீங்கள் அங்கீகாரம் பெற்ற வழங்குநருடனோ அல்லது அவர்களின் சார்பாக செயல்படும் மூன்றாம் தரப்பினருடனோ பணிபுரிந்தால், அவர்கள் பின்வருவனவற்றைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும்:

- 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவருடன் மட்டுமே ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும்
- செய்ய வேண்டிய எந்தவொரு வேலையைப்பற்றியும் அவர்கள் உங்களுக்குச் சொல்கிறார்களா என்பதையும், அத்துடன் வேலையைத் தொடங்குமுன் இதைப் புரிந்துகொள்கிறீர்களா என்பதையும் உறுதி செய்து கொள்ளவேண்டும்
- எரிசக்தி மேம்பாடுகள் (VEU) திட்டத்தின் கீழ் உங்கள் உரிமைகள் மற்றும் கடமைகள், அதேபோல் அவர்கள் வழங்கும் மேம்படுத்தல் மற்றும் ஒப்பந்தம் பற்றிய தகவல்களை உங்களுக்கு வழங்க வேண்டும். தயாரிப்பு/சேவை, மதிப்பீட்டு விலை (quote) மற்றும் ஏதேனும் கூடுதல் கட்டணங்கள், விலக்களிக்கும் நடைமுறைகள் (decommissioning procedures) மற்றும் மிதமாகு கால அளவுகள் (cooling-off periods) ஆகியவற்றை ஒப்பந்தம் விவரிக்க வேண்டும்
- எந்த வேலையும் தொடங்கும் முன், அதைப்பற்றி உங்களுக்குச் சொல்லி, நீங்கள் புரிந்து கொண்டீர்களா என்பதை உறுதிசெய்து கொள்ள வேண்டும்
- ஒரு தயாரிப்பு அல்லது சேவையைத் தொடர நீங்கள் விரும்பினால், மேம்படுத்தலை யார் நிறுவுகிறார்கள் என்பதை உங்களுக்குச் சொல்ல வேண்டும்
- மேம்படுத்தலை நிறுவும் நபர் அல்லது நிறுவனத்தைத் தொடர்புகொள்வதற்கான ஒரு தொலைபேசி எண்ணை உங்களுக்கு வழங்க வேண்டும்.

## பணியை மேற்கொள்ளுதல்

அங்கீகாரம் பெற்ற வழங்குநருடனோ அல்லது அவர்களின் சார்பாக செயல்படும் மூன்றாம் தரப்பினருடனோ பணியைத் தொடங்கும்போது, அவர்கள் பின்வருவனவற்றைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும்:

- உங்கள் சம்மதத்தைப் பெற்ற பிறகுதான் வேலையைத் தொடங்க வேண்டும்
- அந்த வேலையின் விவரங்களைப் பற்றி அவர்கள் உங்களுக்குத் தெரிவிக்கவில்லை என்றால் எந்த வேலையையும் தொடங்கக் கூடாது. நேரம் மற்றும் தேதி, நிறுவப்பட வேண்டிய தயாரிப்பு/சேவை மற்றும் செயலில் ஈடுபடும் நபரின் தகவல்கள், அவர்களின் அங்கீகாரம் பெற்ற வழங்குநர் மற்றும் தொடர்பு விவரங்கள் போன்றவை உட்பட அனைத்தும் இதில் அடங்கக்கூடும்.
- 18 வயதுக்கு மேற்பட்டவருடன் மட்டுமே பேச வேண்டும்
- வேலை முழுமையாக முடிந்ததும், அவர்களின் தொடர்பு விவரங்களைக் கொடுக்க வேண்டும், அப்போதுதான் தேவைப்பட்டால் நீங்கள் அவர்களைத் தொடர்பு கொள்ளலாம்
- சர்ச்சை தீர்வுக்கான (dispute resolution) தகவல்கள் மற்றும் நிறுவப்பட்ட தயாரிப்பு/சேவைகளுக்கான ஏதேனும் வழிகாட்டல்கள் (instructions) மற்றும் உத்தரவாதத் தகவல்களை (warranty information) உங்களுக்கு வழங்க வேண்டும்.

## எரிசக்தி மேம்பாடுகள் (VEU) திட்டத்தைப் பற்றி எங்களுடன் பேச விரும்புகிறீர்களா?

தயவுசெய்து (03) 9032 1310 என்ற எண்ணை அழைக்கவும் அல்லது veu@esc.vic.gov.au என்ற முகவரிக்கு எங்களுக்கு மின்னஞ்சல் செய்யவும்

### ஒரு நுகர்வோர் என்ற முறையில் உங்கள் உரிமைகளுக்கான உதவிக்கு வேறு எங்கு செல்ல வேண்டும்?

நீங்கள் தொலைபேசி வழி சந்தைப்படுத்தல் (telemarketing) அழைப்புகளைப் பெற விரும்பவில்லை என்றால், நீங்கள் **'அழைக்கவேண்டாம் எனும் பதிவேட்டில்' (Do Not Call register)** பதிவு செய்யலாம், இது விதிவிலக்கு இல்லாத ஆஸ்திரேலிய அல்லது வெளிநாட்டிலிருந்து தொலைபேசி வழி சந்தைப்படுத்துவோர் (telemarketer) உங்களைத் தொடர்புகொள்வதைச் சட்டவிரோதமாக்குகிறது.

**www.donotcall.gov.au/** என்ற இணையதளத்துக்குச் செல்லவும் அல்லது **1300 792 958 என்ற எண்ணை அழைக்கவும்.**

**பொய்யான அல்லது தவறாக வழிநடத்தும் கோரிக்கைகள், தொலைபேசி வழி சந்தைப்படுத்தல் அல்லது கதவைத் தட்டுதல்** பற்றிய ஒரு முறையீடு உங்களிடம் இருந்தால், 'விக்டோரிய நுகர்வோர் விவகாரங்கள்' (Consumer Affairs Victoria) அமைப்பைத் தொடர்பு கொள்ளவும்.

**www.consumer.vic.gov.au/contact-us** என்ற இணையதளத்துக்குச் செல்லவும் அல்லது **131 450 என்ற எண்ணை அழைக்கவும்.**

Victorian Energy Upgrades

விக்டோரிய எரிசக்தி மேம்பாட்டுத் (Victorian Energy Upgrades) திட்டத்திற்கான நடத்தை விதிகளின் (Code of Conduct) கீழ், நுகர்வோருக்கு இந்த மெய்த்தகவல் அறிக்கை (factsheet) வழங்கப்பட வேண்டும்.

VICTORIA State Government